செய்து தருகின்ற அந்தத் தொகையை நாங்கள் கடந்த 4 ஆண்டுக் காலத்தில் மட்டும் 7,463 நிகழ்வுகளுக்கு கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் இழப்பீட்டுத் தொகையாக வழங்கியிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

36—

வட்டச் சாலை

***114313—திரு. எம்.என். கந்தசாமி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரம் மற்றும் புற நகரம் ஆகியவற்றை இணைக்கும் வட்டச் சாலைத் திட்டத்தைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் மாநகரில் 26 கிலோ மீட்டர் நீளமுள்ள மேற்கு வெளிவட்டச் சாலை, ரூ.284 கோடி மதிப்பீட்டில் நான்கு வழிச் சாலையாக அமைக்கப்படும் என்று 2010–2011 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய உத்தரவின்பேரில், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து, இத்திட்டத்திற்கான நில எடுப்புப் பிரேரணை தயாரிக்கப்பட்டு வருகிறது. நில எடுப்புப் பணி முடிவுற்றவுடன் சாலை அமைப்புப் பணி மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி.

திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசும், மாநில அரசும் எடுத்த

2011 பிப்ரவரி 9]

நடவடிக்கைகளின் காரணமாக விலைவாசியெல்லாம் குறைந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, நீங்கள் எனக்கு இந்த அனுமதியைக் கொடுத்ததற்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியிலே கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக ஏறத்தாழ 225 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப் பணிகள் சுமார் 88 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று முடிந்துள்ளன. அதேபோல, சிறிய, பெரிய பாலங்கள் என சுமார் 8 கோடி ரூபாய் செலவிலே, சின்ன தடாகத்தில் ஒரு பாலம், செம்மேடிலே ஒரு பெரிய பாலம், மாதம்பட்டி, தொண்டாமுத்தூர், கிழ்சித்திரச்சாவடி போன்ற இடங்களிலேயெல்லாம் பாலப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல பல ஆண்டுகளாக, ஏறத்தாழ வெள்ளைக்காரன் காலம் என்று சொல்வார்கள், அந்தக் காலத்திலிருந்து கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களை இணைக்கின்ற இணைப்புச் சாலையான மேட்டுப்பாளையம் சாலையை 50 கோடி ரூபாய் செலவிலே அமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் ஏற்பாடு செய்து, அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். மேற்கு வெளிவட்டச் சாலை எனப்படும் Western Ring Road 284 கோடி ரூபாய் செலவில் போடப்படும் என்று அறிவித்திருந்தார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய மனம் நிறைந்த நன்றியினைச் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலும், தொகுதி மக்களின் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை–பாலக்காடு சாலை வழியாக சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட வாகனங்கள் தினந்தோறும் கோவை நகருக்குள் வந்து செல்கின்றன. இதனால் கோவை மாநகரம் முழுவதும் மாசுபடுகின்றது. இந்தப் புறவழிச்சாலை அமைந்தால் கோவையில் மாசும், தூசும் குறைந்து தூய்மையாக இருக்கும். மேலும், பாரதியார் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், அதுமட்டுமல்லாமல் 15–க்கும் மேற்பட்ட கல்லூரிகளை இணைக்கின்ற சாலையாக இந்த வெளிவட்டச் சாலை அமைகிறது. அதேபோல,

விவசாயப் பெருமக்களெல்லாம் தாங்கள் உற்பத்தி செய்த வேளாண் பொருட்களை துடியலூர் பெரிய சந்தை, வடவள்ளி உழவர் சந்தை, குறிச்சி உழவர் சந்தை, சுந்தராபுரம், குனியமுத்தூர் தக்காளி மார்க்கெட் போன்ற இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு வசதியாக, அவற்றை இணைக்கின்ற ஒரு சிறந்த சாலையாகும். இப்படிப்பட்ட ஒரு சாலையை முக்கியத்துவம் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஜூன் மாதம் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடைபெற்றதையொட்டி, கோவையிலே பல்வேறு சாலை விரிவாக்கப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. கூடுதல் சாலைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. பாலங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே என்னென்ன பணிகள் சமீபத்திலே நடைபெற்றிருக்கின்றன என்று இங்கே பட்டியலைப் படித்துக் காட்டினார்கள். அதற்காக நன்றியை அரசின்மூலம் அவருக்குத் தெரிவித்துக்கொள்வதோடு, மேற்குப் புறவழிச் சாலை என்பது, மேற்குப் பகுதியிலே மட்டுமல்லாது கோவையினுடைய வடக்குப் பகுதியிலும் புறவழிச் சாலைகள் பற்றாக்குறையாக இருக்கின்றன. அதை அரசு உணரும். ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு இருக்கும்பொழுதுதான், அன்றைக்கு மத்திய அரசிலே தரைவழிப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சராக மாண்புமிகு திரு. டி.ஜி. வெங்கட்ராமன் அவர்கள் பொறுப்பிலிருக்கும்பொழுதுதான், தேசிய நெடுஞ்சாலை எண் 47–ல் சேலம்–கொச்சின் சாலையில் நீளம்பூரிலிருந்து பிரிந்து, தேசிய நெடுஞ்சாலை எண் 67–ஐ கடந்து, தேசிய நெடுஞ்சாலை எண் 209–ஐ கடந்து, பாலக்காடு செல்லக்கூடிய சாலை அமைக்கப்பட்டு, அதற்குப் பிறகு கோவையிலே போக்குவரத்து நெரிசல் குறைக்கப்பட்டது. இப்பொழுது மேற்குப் பகுதியிலே புறவழிச் சாலை அமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். அச்சாலைகள் எந்தெந்த நேர்ப்பாட்டிலே செல்லக்கூடியவை என்பதை மாண்புமிகு உறுப்பினரே இங்கே விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார். அந்தச் சாலை வடக்குப்

2011 பிப்ரவரி 9]

பகுதியாகச் சென்று, அதாவது நாகப்பட்டினம்–கூடலூர்–மைசூர் தேசிய நெடுஞ்சாலை எண் 67–ல் துடியலூர் பகுதியிலே அந்தச் சாலை இணைகிறது. அதேபோல, தேசிய நெடுஞ்சாலை எண் 67–ல்கூட, சூலூர் பகுதியிலிருந்து தேசிய நெடுஞ்சாலை எண் 47–ஐக் கடந்து, தேசிய நெடுஞ்சாலை எண் 67–ல் இணைவதற்கான ஒரு புறவழிச் சாலைகூட, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் ஆய்விலே இருக்கிறது. எனவே, இந்த இரு சாலைகளும் அமையும்பட்சத்தில் கோவை மாநகரிலே மிகப் பெரியதொரு மாறுதல் போக்குவரத்திலே உருவாக்கப்படும்.

அதுபோல, உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டிலே அறிவிக்கப்பட்ட மிகப் பெரியதொரு பாலம், காந்திபுரம் பகுதியிலே அமைய இருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட பணிகள் கோவையில் தொடர்ந்து நடைபெறுகின்ற காரணத்தினால், போக்குவரத்து நெரிசல் வெகுவிரைவிலே குறைய இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கக்கூடிய சூழ்நிலை, நிச்சயம் மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே கோவையிலே உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.என். கந்தசாமி சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. எம்.என். கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கோவை உக்கடம் பைபாஸ் சாலைப் பகுதியிலிருந்து சுண்டக்காமுத்தூர் வழியாக கோவைப்புதூர் செல்கின்ற வழியிலே புட்டுவிக்கி என்ற இடத்திலே பாலம் ஒன்று இருந்தது. அந்தப் பாலம் நகரசபையினுடைய பாலமா, பேரூராட்சியினுடைய பாலமா அல்லது கார்ப்பரேஷனுடைய பாலமா என்று தெரியாமல் இருக்கின்ற சூழ்நிலையிலே யாரும் கட்ட முன்வராமல் இருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோவை மாநகரம், பெருநகரமாக மாறும்பொழுது அந்தப் பணியினைச் செய்து முடிக்கலாம் என்று இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அவசர நிலையை முன்னிட்டு அதை இப்பொழுது நீக்கிச் சிறப்படையச் செய்யுமாறு உங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

[2011 பிப்ரவரி 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். விரைவிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவின்பேரில் ஈச்சநேரியில் இருக்கக்கூடிய இரயில்வே கடவில் அமைந்திருக்கக்கூடிய பாலத்தில் நெடுஞ்சாலைத் துறையினுடைய அணுகு சாலைப் பணிக்கான தொடக்க விழா நடைபெறவிருக்கிறது. அதற்கு நாங்கள் எல்லாம் செல்கின்ற நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தப் பாலத்தை நேரில் பார்த்து அதற்குரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. மதியரசன்.

திரு. சுப. மதியரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டத்திலே இளையான்குடி தொகுதியில் மட்டும்தான் மோசமான களிமண் தரையாக உள்ளது. ஒருவழித்தடச் சாலையாக உள்ளதாலும், போக்குவரத்து அதிகமாக உள்ளதாலும் விபத்துகள் அடிக்கடி நடக்கின்றன. இளையான்குடி, வண்டல், சுக்கரவட்டி ஒருவழித்தடச் சாலையான, மொத்தம் 27 கிலோ மீட்டர் தூரத்தில், இதில் 10 கிலோ மீட்டர் தூரம் இடைவழிச் சாலையாகத் தரம் உயர்த்தப்பட்டுவிட்டது. மீதமுள்ள 17 கிலோ மீட்டர் தூரத்தையும் இடைவழித் தடச் சாலையாகத் தரம் உயர்த்திக் கொடுத்திட கருணை உள்ளம் கொண்ட கலைஞரின் இளைஞர் அமைச்சர் முன்வருவாரா எனத் தங்கள் வாயிலாக கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுகுறித்து என்னிடத்திலே எழுத்துபூர்வமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதை துறை பரிசீலித்துக்

2011 பிப்ரவரி 9]

கொண்டிருக்கிறது. சாலையை அகலப்படுத்துகிற பணியை வரலாற்றில் என்றைக்கும் இல்லாத அளவு, தமிழகத்திலே தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு ஐந்தாவது முறையாக பொறுப்பேற்ற பிறகு 2006 முதல் 2010 வரை, நான் சொல்வது கடந்த மார்ச் 31 ஆம் தேதி வரை 1,280 கிலோ மீட்டர் சாலை, 3,770 கோடி ரூபாய் செலவில் அகலப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு வழிச் சாலைகளை இடைவழித் தடங்களாகவும், சில நேரங்களிலே இரு வழித் தடங்களாகவும், பல் வழித் தடங்களாகவும்கூட அகலப்படுத்தியிருக்கிறோம். அந்த அளவுக்கு மகத்தான பணி நடைபெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம், அண்ணாமலை நகர் இரயில்வே மேம்பாலம் இறக்கத்தில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்ற சூழ்நிலையில், அதைத் தவிர்ப்பதற்காக ரவுண்டானா அமைக்க வேண்டுமென்று நான் கடந்த இரண்டு வருடங்களாக கேள்வி நேரத்தின்போது கோரி வருகிறேன். அதேபோல, சிதம்பரம் புறவழிச் சாலையில், வேகத்தடைகள் ஏதும் இல்லாத காரணத்தினால், அடிக்கடி பெரிய விபத்துகள் ஏற்பட்டவண்ணம் இருக்கின்றன. இந்த இரண்டு பிரச்சினைகளையும், அதாவது புறவழிச் சாலையில் வேகத் தடையையும், சிதம்பரம், அண்ணாமலை நகர் இரயில்வே மேம்பாலம் இறக்கத்தில் ரவுண்டானாவையும் அமைத்துத் தருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் விபத்தைத் தவிர்ப்பதற்கு ரவுண்டானா அமைக்க வேண்டுமென்றும், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு அது பயன்படும் என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. விரைவாக நடவடிக்கை எடுக்கும்.

[2011 பிப்ரவரி 9

அதே நேரத்தில், சிதம்பரம் நகரத்திற்கு, உலக வங்கித் திட்டத்தின்கீழ் புறவழிச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் மிகப் பெரிய போக்குவரத்து நெரிசல் குறைக்கப்பட்டிருக்கிறது. எனவே வாகனங்களுடைய வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கோரிக்கையை அரசு பரிசீலிக்கும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் ஆகிவிட்டது. வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

நவீனப்படுத்துதல்

***107659—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

குழந்தைகள் மையங்களில் சுகாதார முறையில் உணவு வழங்குவதற்காகவும், புகையில்லா சுற்றுப்புறச்சூழலை ஏற்படுத்தவும், மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அரசு பொறுப்பேற்றது முதல், அதாவது, 2006–2007 ஆம் ஆண்டு முதல் இவ்வாண்டு வரை 9,940 மையங்களில் மின்சார வசதியுடன் எரிவாயு இணைப்பு அடுப்பு, அடுகலன் அதாவது குக்கர் ஆகியவை வழங்கப்பட்டு நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

முற்பகல் 10–20

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பொழுது 9,940 அங்கன்வாடி